உ

சிவமயம்.

# திருக்கழுக்குன்றமாலை.

காஞ்சீபுரம்
பச்சையப்பமுதலியாரது
கல்விச்சாலைத் தமிழ்ப்புலமை

## கா-சபாபதிமுதலியார்

பாடியது.

இது-கனம்பொருந்தியகம்பேனியாராலேற்படுத்தப்பட்ட
யூநிவர்சிட்டியென்னும் சகலசாஸ்திர சாலைத்
தமிழ்த்தலைமைப்புலமை
மழவை-

## மகாலிங்கையரவர்களாலும்,

ஷை தேவஸ்தானம்-தர்மகர்த்தர்களி லொருவராகிய
திருவாவடுதுறை ஆதீனவித்துவான

## தாண்டவராயசுவாமிகளாலும்

பார்வையிடப்பட்டு-
திருவெள்ளவாயில் தர்மகர்த்தாவாகிய-
காணியம்பாக்கம்

### முத்தையாமுதலியாரவர்களால்

ச- அண்ணாமலைமுதலியாரவர்களது
சரஸ்வதிவிலாசஅச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.
சாலிவாகனம்-௲௭௱௯௰௭.
பிலவங்கஞூ சித்திரைமீ. சென்னபுரி.

சிவமயம்.

இது - சனம்பொருந்திய
கம்பேனியாராலேற்படுத்தப்பட்ட
யூனிவர் சிட்டியென்னும் சகலசாஸ்திரசாலைத்
தமிழ்த்தலைமைப்புலமை - மஹாழவை,

## மகாலிங்கையரவர்கள் பாடியது.

(கட்டளைக்கலித்துறை.)

நீராருலகிற்றமிழ்க்காவியமெனநின்றபல. *
பேராவுறுதியிற்கற்றாய்ந் துணர்ந்தபெரியனரந் *
காராதவன்பினன்கச்சிச்சபாபதியாம்பெயரோன். *
சீரார்கழுக்குன்றமாலையைப்பாடிச்சிறந்தனனே. .. *

இது - திருக்கழுக்குன்றத்தேவஸ்தானம்
தர்மகர்த்தர்களிலொருவராகிய - திருவாவடுதுறை

ஆதீனவித்துவான் -

## தாண்டவராயசுவாமிகள் பாடியது.

(கட்டளைக்கலித்துறை.)

வேதங்கடம்மில்விதித்தனசெய்துவிலக்கியன. .... *
ஏதமெனத்தள்ளிக்கற்றவரோடளந்தெப்பொழுதும் *
ஆதரஞ்செய்புநங்காஞ்சிச்சபாபதியாப்புலவன் .. .. *
தீதகல்வுற்றகழுக்குன்றமாலையைச்செப்பினனே ... *

உ

சிவமயம்

# திருக்கழுக்குன்றமாலை.

(காப்பு.)

நேரிசை வெண்பா.

திருக்கழுக்குன்றத்துச்சிலேடைவெண்பாக்கூறக் .. *
கருத்தளித்துநாயேனைக்காக்கு-மருத்துளவார் .... *
விண்டுவனப்பிள்ளையாம் வேதன்முதலோர்போற்றும்
வண்டுவனப்பிள்ளையார்வந்து.. ..... ..... ..... ...*

சிலமறைபோர்வாழ்திருக்கழுக்குன்றத்துவெண்பா..*
மாலையொருநூறுமகிழ்ந்துரைக்க-நாளும்வா... .... *
யுள்ளானையைந்துகரமுள்ளானையன்பரகம் .... .... *
விள்ளானைநெஞ்சகமேவேண்டு,.... .... .... ...*

(வாழ்த்து.)

வாழ்கவரனஞ்செழுத்துவாழ்கவரன்வெண்ணீறு.... *
வாழ்ககழுக்குன்றத்துவாழ்வார்கள்-வாழ்கபுவி. .... *
வாழ்கமறைச்சைவநெறிவாழ்கவரன்மெய்யடியார் .. *
வாழ்கமுதனால்வர்சொலும்வாக்கு... ..... ... .. ...*

௨

திருச்சிற்றம்பலம்.

# திருக்கழுக்குன்றமாலை.

திங்கடவழ்மாடந்திருப்பாற்கடனேராய்க் ... . *
கங்கைதடநேராங்கழுக்குன்றே-மங்கை ..... *
யுருவாக்களித்தானுலகெலாமென்னுந்... .... ---*
திருவாக்களித்தான் சிலம்பு .... .. .. ....(௧)

அம்பரத்திற்செல்குண்டை யண்ணியவேய் கோயிற்கொ
கம்பநிகராங்கழுக்குன்றே-நம்பும் .... ..... ... [டிக்
உருவருவில்லா வொருமுப்புரத்தார் ... .. .. .. *
வெருவருவில்லார்விருப்பு ....... .... .... (௨)

வண்டுமொய்க்கும்வெண்டாமரையைமதியென்னக் . *
கண்டுசிறிதாவுங்கழுக்குன்றே-சண்டனைமுன் ......... *
தள்ளிமலைக்கத்தன் றனிமலர்த்தாள் வீசிறேன் .... *
வெள்ளிமலைக்கத்தன் விருப்பு .... .... ....... (௩)

அடியர்போல்வெண்ணீறணிந்தக்கம்பூண்டு ..... .. *
கடுவன்பணிகழுக்குன்றே-முடியினின்மண் .... ... *
வைத்தன்பனாயாள்மகதேவனண்டர்தொழும் ...... *
அத்தன்பனாயானகம் .... ........... .... (௪)

கொன்றைமரத்தைக்கொடிப்பவளஞ்சுற்றமதிக் .... *
கன்றுடையான்போலாங்கழுக்குன்றே-தின்றுதிரு - *
நாவணகரத்த னல்லரவக்கங்கணஞ்சேர் .... ... *
பூவணகரத்தன்பொருப்பு .... .. ... ... .....(௫)

விண்ணார்மதிமணஞ்செய்வேடர்பந்தரித்தகட்டுங்......*
கண்ணாடிபோலாங்கழுக்குன்றே-நண்ணார் .... .... *
செருக்கடவூரத்தத்திகிரிவிடையோன் .... ... ... *
திருக்கடவூரத்தன்சிலம்பு .... .. .... .... (௬)

சந்தமிகுங்காந்தளிடைச்சார்மதியமாதர்கள்கைக் .. *
கந்துகமேய்க்குங்கழுக்குன்றே-யிந்து ......... *
சிகரத்துவைத்தான்செயிர்த்தரக்கன்றோள்கள் .... *
தகரத்துவைத்தான்றலம்.. .... .... .... .. (௭)

பிள்ளைமதியைக்குறவர்பேரேனக்கோடென்று..... . *
கள்ளமுடனெட்டுங்கழுக்குன்றே-கொள்ளும் .... *
அலையாலங்காட்டினானாறுஞ்சளத்துத்.... .. .... *
தலையாலங்காட்டினான்சார்வு.. .. .. .. .... (௮)

குன்மம்படுகாசங்குட்டமுதலாய..... .... ... ... *
கன்மவினைநீக்குங்கழுக்குன்றே-வன்மனத்தர் .. ..... *
காண்கைக்கரியான்கருதுமிரண்டாயிரங்கோட் .... *
டெண்கைக்கரியானிடம் .... .. ..... .. .. (௯)

வாய்ந்தகலைமுழுத்தமதிக்கதிர்வீசச்சந்திர ... .. ... *
காந்தநீரூறுங்கழுக்குன்றே-சேர்ந்தமலர்த் .. .. .. *
தாளானனந்தந்தவழ்கடலினஞ்சருந்தி .. .. .. ... *
மாளானனந்தன்வரை .. .. .. .... ..... .. (௰)

மாணிக்கப்பாறையுறுமாதர்கமலாசனிபோற் .. .. *
காணத்திகழுங்கழுக்குன்றே-யேனுற்ற .... ..... *
ஆலவாயுள்ளானகத்தன்பிலனையரு .. .. ..... .. .. *
னாலவாயுள்ளானகம் ..... .. ..... .... .. (௰௧)

விண்டொடர்மேடம்வருடைவேங்கையருகிருத்தல் - *
கண்டுபயநீங்குங்கழுக்குன்றே-தொண்டர்வினைக் .. *
கோடத்துவந்தான்குறைத்தானொருவேடு ........ *
வேடத்துவந்தான்விருப்பு ..... ..... ..... (௰௨)

மாந்தளிர்க்கையேந்திவனமான்றேனித்தேய்க்கமதி *
காந்திமிகுத்தோங்குங்கழுக்குன்றே-சாந்தந் .... *
தகவருந்தவந்தான்றழைத்தசிறுத்தொண்டர் .. .. *
மகவருந்தவந்தான்மனை ..... ..... ..... .. .. (௰௩)

சேல்வெருண்டுபாயவளாத்தேனிறல்கீண்டுபுனற் .. *
கால்வழியவோடுங்கழுக்குன்றே-மால்கெட்டுத் ....*
தின்னும்பரியாஞ்சுகமுறவேயாள்வன்மறை .... ..*
என்னும்பரியானிடம் ........ ..... ..... .. (௧௪)

அண்டர்தொழுங்காழியர்கோனப்பர்திருவன்றொண்ட
கண்டுதமிழ்பாடுங்கழுக்குன்றே-தொண்டருக்குப் [ர்
பஞ்சமுகத்தான்படிக்காசருளினான் .... .. .. ..*
பஞ்சமுகத்தான்பதி .... .. ... .. .. .. (௧௫)

எந்திழையார்தங்கரத்தி லேய்வதுபோற்பைங்கிள்ளை *
காந்தளிடைமேவுங்கழுக்குன்றே-பார்த்தனான் .. ..*
பூட்டியவில்லத்தர்பொழிலேழோடேழீன்று .. ...*
காட்டியவில்லத்தர்காப்பு ..... ... .. .. ... (௧௬)

மாதர்நடங்கண்டுமயின்மறையநாகங்கள் .. ..... ..... *
காதலுடனாடுங்கழுக்குன்றே-யோதுங் .... .. ..*
கலிக்கம்பனகத்தர்காணுமடியார் .... .. ... .. *
கலிக்கம்பனகத்தர்காப்பு .. ... .. .. ... .. (௧௭)

இமிர்செம்மணிகதிர்போலெங்குமொளிவீசக் .. ..*
கமலமலர்கழுக்குன்றே-தமர .... ... .. .. .. *
மறைக்குமருகனலனிமயமால்வெற் .. .... ....*
பிறைக்குமருகனிடம் .. .. .. ..... .. ... .. (௧௮)

மதிதவழுமாடமரகதத்திருந்செங் - - *
கதிர்பச்சையாங்கழுக்குன்றே-வதியு - - *
மதியரவம்பாற்றினான்வாழ்த்திவணங்கு - - - *
மதியரவம்பாற்றினான்வாழ்வு - - - (௰௯)

தொண்டின்மிகுவாசவூர்த்தோன்றல்குருவடிவங் - *
கண்டுகளிக்குங்கழுக்குன்றே-விண்டுமுனம் - - *
வேகத்தானாகத்தான்மேவியுளைகத்தோனுமையாள் - *
பாகத்தானாகத்தான் பற்று. - - - (௨௰)

குலவுமந்தாரத்துவருங்கோளரவைக்கண்டு - - *
கலவமயினாவுகழுக்குன்றே-குலவரியா - - *
மோட்டாமையோட்டினான் ஊருநமன்கையிலெனைக்.
காட்டாமையோட்டினான்காப்பு - - (௨௧)

வானதிதோயும்பர்மடவனங்குறத்தியர்தங் - - *
கானடைகண்டேங்குங்கழுக்குன்றே-ஞானமே - *
ஆன்றதிருக்கண்ணார்தமர்பகத்தார்செவ்வனலைக் - *
கான்றதிருக்கண்ணார்தங் காப்பு - - - (௨௨)

தாமரையம்பாற்கார்முகவேழத் தால்வனத்தாற் - *
காமனிசராங்கழுக்குன்றே-மாமன்றீ - - *
யாகமவித்தானியம்புமிருபத்தெட்டாம் - - *
ஆகமவித்தானகம் - - - - (௨௩)

ஆம்பன்றுமகிழார்ந்துசகிபார்ந்துபலகண்மருவிக் - *
காம்பிந்திரனுங்கழுக்குன்றே-யாம்புகழ்சேர் - *
ஆலவாயுள்ளானகத்தன்பிலனையரு - - *
ளாலவாயுள்ளானகம் - - - - (உச)

சந்தமிகுந்தக்குறமான்சார்ந்துமயிலின்புற்றுக் - *
கந்தனிகராங்கழுக்குன்றே-அந்தமிகும் - - *
அஞ்சமறியானருள்வரங்கேட்கும்மடியார் - - *
அஞ்சமறியானகம். - - - - (உரு)

சுருதிபயின்றேதிமமாய்ச்சூழ்கலைமானேந்திக் - *
கருதுமயனுங்கழுக்குன்றே-'பொருமமனார் - *
நட்டாரகத்தானலிவித்தார்சொற்பதிக - - *
நட்டாரகத்தானகர், - - - (உசா)

கண்ணானுர்தாட்கிட்டுக்காணேனமேனிவந்து .... *
கண்ணனெனுமாலாங் கழுக்குன்றே-நண்ணு .... *
மறைக்காட்டினுர்வாண்மகிழ்பாசூரிற்பாம் ... ... *
பிறைக்காட்டினுர்வாழிடம் .... ..... .. (உஎ)

திருத்தன்மகிழ்ந்துதவநீடிமெய்யன்பர் - *
கருத்தைநிகர்கழுக்குன்றே-வருத்தமுறு - *
மாலயமேயான்மருவாதருள்பூசல் - - *
ஆலயமேயானகம். - - (உஅ)

விண்டுபிரமன்விழைந்துகழுகைத்தொழுதல் - *
கண்டவர்புள்ளேங்குங்கழுக்குன்றே-அண்டர்தொழும்
பாதத்தானந்தம்பணிகொடிருப்பாணர்யாழ் - *
நாதத்தானந்தனகர் - - - (௨௯)

பூவைசமயத்தலைவர்போற்றுமொழிபாடவும்பர் - *
காவில்வணங்குங்கழுக்குன்றே-சேவையர்கோன் - *
தொண்டர்புராணஞ்சொலமுன்னருள்கூர்ந்த - *
அண்டர்புராணனகம் - - (௩௰)

மிண்டுமெயினர்கணைவிட்டுமுயல்வேட்டைசெயல் *
கண்டுமதியஞ்சுங்கழுக்குன்றே-பண்டைமறை - *
யிட்டுமஞ்சனத்தனிருபாலுளானன்பர் - *
ஆட்டுமஞ்சனத்தனகம். - - (௩௧)

ஆனையவமதித்தலாலன்பினந்தி - - *
கருடனேச்சிறுகழுக்குன்றே-அருளின் - *
உருத்தலைப்பூரார்கலிவிடமுண்போர் - - *
திருத்தலைப்பூரார்சிலம்பு. - - (௩௨)

மருவுமொருநால்வேதம்வந்துகுன்றமாகிக் - *
கருதவாநல்குகழுக்குன்றே-திருநடஞ்செய் - *
பாதாம்புயத்தர்விற்பாத்தனடிக்கத்தழும்பு - *
மீதாம்புயத்தர்விழைவு - - - (௩௩)

உய்வானோர்கோடியுருத்திரர்கள்பூசித்துக் - *
கையாற்றொழுஞ்சீர்க்கழுக்குன்றே-மையார்விண் *
விசுபதத்தான்விரிஞ்சன்றொழுவரியான் - *
பாசுபதத்தானபதி. - - - (௫௪)

அண்ணன்மொழிமறுத்தலானந்திவந்துதவங் - *
கண்ணவருளுங்கழுக்குன்றே-நண்ணியமான் - *
னஞ்சாக்கரத்தர்தொழுமன்பர்தாமறவாப் - *
பஞ்சாக்கரத்தர்பதி. - - (௫௫)

வாட்டமின்மார்க்கண்டரான்மாயிகள்பன்றியாய்க் *
காட்டிற்றிரியுங்கழுக்குன்றே-பூட்டமரித் - *
னள்ளிமலையான்னவசனந்திகாவல்கொளும் - - *
வெள்ளியமலையான்விருப்பு. - - (௫௬)

நேருமொருமாதுபற்றுதேடிப்பிழையுற்ற - *
காரியர்ச்சிக்குங்கழுக்குன்றே-சீரியமண் - *
பிட்டுக்களித்தான்பெருமுடியில்வைத்தடியும் - *
பட்டுக்களித்தான்பதி. - - - (௫௭)

எண்ணும்பிருகுவிசைத்தபடிபுண்டரிகக் - *
கண்ணன்பூசித்தகழுக்குன்றே-நண்ணு - *
மருமிக்களித்தார்வயங்களகப்பாடல் - *
தருமிக்களித்தார்தலம். - - (௫௮)

விஞ்சியசாவித்திரிசொல்வெஞ்சாபநீங்கமலர்க் - *
கஞ்சன்பணியுங்கழுக்குன்றே-தஞ்சமெனச் - *
சுந்தரப்பேரம்பெய்தார்சூழுஞ்சடைமுடிக்கண் - *
றந்தரப்பேரம்பெய்தாரார்வு. - (௩௯)

எண்மர்வசுக்களியல்பொடுவெண்ணீறணிந்து - *
கண்பணிபூண்டேத்துகழுக்குன்றே-திண்மைமிகுங் *
கோளரவததிறன்கூடாவகையருள்பூண் - *
வாளரவத்திறன்வாழ்வு. - - (௪௰)

விதிசொற்படியாக்கர்வெம்மைதவிர்ப்பான் - *
கதிரவர்போற்றுகழுக்குன்றே-எதிரும் - *
செருவிற்கோலத்தத்திகிரியனுக்கொண்ட - *
திருவிற்கோலத்தர்சிலம்பு. - - (௪௧)

முனிவர்கணம்பாணினியமுன்னவனைவேண்டிக் - *
கனிவொடுவாழ்த்துகழுக்குன்றே-யினிதின் - *
இருக்கேத்திரத்தவெழில்கொள்குலத்தர் - *
குருக்கேத்திரத்தர்குடி. - - (௪௨)

சங்கரனார்சொன்மறுத்ததன்மையாற்சம்பாதி - *
கங்கெனவுற்றேத்துங்கழுக்குன்றே-தங்கியவெங் - *
காமவேதத்திறன்சென்றுதளித்தானுஞ் - *
சாமவேதத்திறன்சார்வு. - - (௪௩)

முன்னுபன்றிமாயிகன்றொல்லுருவாயோர்பசுத்தான்.
கன்னியுருவான கழுக்குன்றே-யென்னுள் - *
வதியமலையார்மகிழுமிடப்பாலார் - - *
பொதியமலையார்பொருப்பு. - (௪௪)

கட்டங்கள்பாற்றுன்னக்காட்டுமலர்வாவிபோலாக் - *
கட்டங்கள்பாற்றுங்கழுக்குன்றே கொட்டுந் - *
தமருகக்கையான்றருபிழைசெய்தாலுந் - *
தமருகக்கையான்றலம். - - (௪௫)

கைப்புகநல்காண்கடுஞ்சினம்விட்டோரைநமன் - *
கைப்புகநல்காக்கழுக்குன்றே-செப்பும்வளை - *
மத்தகநாட்டத்தாழ்வளைபார்க்கடனிறத்தன் - *
மத்தகநாட்டத்தான்வரை. - - (௪௬)

காமிகவாக்குகருதியர்ச்சிப்போர்க்குமலர் - *
காமிகவாக்குகழுக்குன்றே-தோமறுகல் - *
வல்லிபங்கானார்வளர்கரும்புண்ணச்செய்தோர் - *
வல்லிபங்கானார்வரை. - - - (௪௭)

காட்டத்தெரியுங்கனல்வேள்வியானுலகந் - *
காட்டத்தெரியுங்கழுக்குன்றே-நீட்டும் - *
விடமருந்தானுவிறலப்பர்தந்நோய் - *
விடமருந்தானார்விருப்பு. - - (௪௮)

கழுகுநடுவோரமிதைகாணும்வெளியில்லார் - *
கழுகுதொழுங்கழுக்குன்றே-கழுவிற் - *
சமணரையேற்றினார்தானவர்கள்பால்வந் - *
சமணரையேற்றினார்சார்வு. - - (௪௯)

க-ழு-கு- இம்மூன்றெழுத்தும்
நடுவில்பொருந்திய-அம்- இதை
வெளி-என்பது-அகம்- இழுதை-
வெகுளியென்றாதல்காண்க. ...*

ஆதியந்தமாகவிதியார்பூவணிவோர்கள் - *
காதலுடனேத்துங்கழுக்குன்றே-யோதும் - *
இருக்குமறியானிடக்கரத்தெப்போழ்தும் - *
இருக்குமறியானிடம். - - (௫௰)

பூ-என்னும் எழுத்தின் முதலில்-
வி-என்னும்-எழுத்தும் அந்தத்தி
ல்-தி-என்னும் எழுத்தும்பொரு
ந்தினால்விபூதியென்றாதல்காண்க
(இனிச்சிலேடை.)

உள்ளும்பாத்தையர்களுட்டுறவோர்மாரன்மலர்க் *
கள்ளம்பொழியுங்கழுக்குன்றே-கொள்ளுமன்பின் *
வாயிலாருள்ளமணிக்கோவிலாக்கொண்ட - *
தாயிலாருள்ளதலம். - - (௫௧)

பூமருவும்வண்டினங்கள்பூவையர்போற்கற்பகம்போந்
காமரம்பாடுற்றகழுக்குன்றே-சேமமழு - *
ஆடுங்காலத்தன் பணிவியிடங்கொண்டவன்மா - *
றேடுங்காலத்தன்சிலம்பு. - - (௫௨)

செவ்விமயில்கோபஞ்சிவார்ச்சனைசெயில்லிலைந்து - *
சவ்வியங்குலாவுகழுக்குன்றே-யெவ்வ - *
மலவிடக்கையானலைவந்தாள்வோனேர்மா - *
னிலவிடக்கையான்வாழ்நிலை. - - (௫௩)

தாவிவிளைஞர்மணஞ்சாருமிடந்தண்முகில்கள் - *
காவணமேலோங்குங்கழுக்குன்றே-பாவுணாத்து - *
நேசித்துவந்தார்நிறைபசிக்காக்கச்சூரில் - *
யாசித்துவந்தாரிடம். - - (௫௪)

செங்கைமழுவோன்சிரமுங்குருகினமுங் - - *
கங்கையகலாக்கழுக்குன்றே-யிங்கினிமேல் - - *
எம்மைப்படையானிணையில்பூதங்களெனுஞ் - *
செம்மைப்படையான் சிலம்பு. - - (௫௫)

விஞ்சுகயலினங்கண் மேன்மைபெறுகுளத்துக் - *
கஞ்சங்குதிக்குங்கழுக்குன்றே-தஞ்சமென - - *
மாவினடிப்பான் மருவிஞனன்பருளப் - *
பூவினடிப்பான்புரம். = = = (௫௬)

சேரும்பிதிர்கருமஞ்செய்பவருங்கான்மயிலுங் - *
காளைவிழையுங்கழுக்குன்றே-தேதொதிர்ந்து - - *
வீரிடத்தானைத்தந்திமெய்யுரித்தோன்சூழவரும் - *
பாரிடத்தானத்தன்பதி. - - - (௫௭)

நல்லார்குடைதடத்து நாடுமருவியினுங் - - *
கல்லாரமேவுங்கழுக்குன்றே-சொல்லாரு - - *
மாமகத்துவந்தான்மலியுமம்பர்த்தொண்டர்செயுந் *
தீமகத்துவந்தான்சிலம்பு. - - - (௫௮)

மாதர்மலர்விழியும்வாசிப்போர்தம்மனமுங் - *
காதகமோடுங்கழுக்குன்றே-போதமிகுஞ் - - *
சேரமானத்தன்சிலம்பினுலாப்பாடமகிழ் - - *
வீரமானத்தன்விருப்பு. - - - (௫௯)

பொற்பின்மடவாருக்கும்பூதியணிவோருக்குங் - *
கற்பங்கழியாக்கழுக்குன்றே-யற்பொழுதில் - *
ஆடினானந்தியமலனையானுகமங்கள் - - *
பாடினானந்திபதி. - - - (௬௰)

(கற்பம்) விபூதிவிளைவிக்கும் விதியிலொன்று.

பஞ்சினடியார்கவுனும்பாடுமறையோருக் - - *
கஞ்சனையொப்பாகுங்கழுக்குன்றே - தஞ்சமென - *
ஏனாதிநாதர்தாமேத்தவருள்சுரந்த - - *
வானாதிநாதர்மனை. - - - - (௬௧)

உட்டுறவோர்மாதரொளிர்பூண்முலைவிழைவார்க் - *
கட்டங்கடக்குங்கழுக்குன்றே-யிட்ட - - *
மருவக்கலையான்வருமூவர்பாடுந் - - *
திருவக்கலையான்சிலம்பு. - - - (௬௨)

செந்திருவனார்காரமுஞ்சேருமதகரியுங் - - *
கந்துகமல்குங்கழுக்குன்றே-சந்திரன்சேர் - - *
சென்னியரல்லார்திருமிடற்றாரன்பர்களுக் - - *
கன்னியரல்லா ரகம். - - - (௬௩)

விரும்புமணிப்புற்றுமேவுமணப்பந்தர் - - *
கரும்பணிகளோங்குகழுக்குன்றே-யரும்புஞ் - *
சிலம்பொலிகாட்டினார்சேர்பிராற்குப்பேய்க் - *
குலம்பொலிகாட்டினார்குன்று. - - (௬௪)

தாரிலகுதோரணமுஞ்சைவருறைநன்மடமுங் - *
காரணமல்குங்கழுக்குன்றே-பாரை - - *
யருந்தேற்றுவந்தானமரிளசைமாறன் - - *
விருந்தேற்றுவந்தான் விருப்பு. - - - (௬௫)

(காரணம்) ஒரு ஆகமம்.

பொன்னனையார்பூண்முலையும்பூகமலிவயலுங் - *
கன்னலணிவீறுங்கழுக்குன்றே-யென்னைக் - - *
கருவிற்கிடத்தார்கருதியபொன்னேங்கற் - - *
செருவிற்கிடத்தார்சிலம்பு. - - (௬௬)

பித்தையகல்வீரர்கையம்விட்டிறப்பினிற்புறவுங் - *
கத்தியுலவுங்கழுக்குன்றே-யத்தி - - - *
யுரித்தானையலமொழித்தான்பணிப்பூண் - - - *
பரித்தானமலன்பதி. - - - (௬௭)

சேர்ந்தனடியர்குழாஞ்சேர்குறிகள்வைத்திளைஞர் - *
கார்த்தம்படிக்குங்கழுக்குன்றே-யேந்துகொன்றைத் *
தேனமருங்கண்ணியார்தேவியொடுபார்த்தனெதிர் *
கானமருங்கண்ணியார்காப்பு. - - (௬௮)

நம்புசழைக்கூத்தர்களுநாடுமலைவாவியினுங் - *
கம்பத்திவருங்கழுக்குன்றே-வம்பு - - *
விரவிமதிக்கண்ணன்புமேவேனையாண்ட - - *
இரவிமதிக்கண்ணனிடம். - - - (௬௯)

சேலோடுதண்புனலுஞ்செம்பொற்கழலுமன்னர் - *
காலோடிவருங்கழுக்குன்றே-பாலமம்பிற் - - *
கட்டிக்களித்தான்றன்கண்வளர்பாலாழிபுலிக் - *
குட்டிக்களித்தான்றன்குன்று. - - (௭௰)

செம்பவளவாய்க்கிளியுஞ்செந்தாமரைக்கயமுங் - *
கம்புளிருக்குங்கழுக்குன்றே-வெம்பிடலம் - *
யானைந்துமாடவயமபுரிநண்ணுதாள்வோன் - *
ஆனைந்துமாடுமகம். = = = (௭௧)

PAGE NO- 17-18 MISSING IN ORIGINAL

நற்குலத்துவந்தோருநாடுமணிவீதிகளுங் - *
கற்றளியோவாக்கழுக்குன்றே - பொற்கழன்மேற் - *
கோவையிடத்தான்குளிர்துளவற்காழிதந்த - *
பாவையிடத்தான்பதி. (௮௨)

சிட்டர்தொழுமாலயமுஞ்செய்யுமலர்பொழிலுங் - *
கட்டளைமாறாக்கழுக்குன்றே - கிட்டித் - *
திருப்பதத்தானற்றிகழ்மதியைத்தேய்த்த - *
பருப்பதத்தானற்பதி. - - (௮௩)

பொன்றாழ்மனையகமும்புண்ணியரும்பாசவினை - *
கன்றாதரிக்குங்கழுக்குன்றே - துன்றுமன்பிற் - *
ஞூழவுரியார்தமக்கருள்வார்வந்தெதிர்த்த - *
வேழவுரியார்விருப்பு. - - (௮௪)

துன்னுமணஞ்செய்விப்போர்சூழாலயஞ்சமைப்போர்
கன்னிதானஞ்செய்கழுக்குன்றே - துன்னுசைவ - *
நன்கூரகத்தன்பர்நாளுமறவாத - - *
புன்கூரகத்தன்பொருப்பு. - - - (௮௫)

சாலச்சிவகதையாற்லசவர்நமன்கோளையான் - *
காலங்கழிக்குங்கழுக்குன்றே - மாலெனுமோர் - *
அஞ்சாத்தின்றோலாரணிபுட்புரமெரித்தோர் - *
குஞ்சரத்தின்றோலார்குடி. - - (௮௬)

பாந்திழியுமஞ்சனத்துப்பண்வீணைமாதர் - *
காந்தைவருகழுக்குன்றே-புரந்தீ - *
யிடப்பூவையத்தன்றிவர்ந்தோனுமையா - *
மடப்பூவையத்தன்மனை. - - (௮௭)

செப்புமன்னர்முற்றத்துத்தேற்றூர்மலர்ச்சோலை *
கப்பந்தருவார்கழுக்குன்றே-செப்பரிய - *
மானப்பணிவான்மதிவெண்டலையோடு - *
வானப்பணிவான்மனை. - - (௮௮)

சொற்பெரியபாந்தள்சொரிகாலமாரியின்றூர் - *
கற்புழைவீழுங்கழுக்குன்றே-விற்கதிர்கள் - *
விண்பாவினன்பல்விழவடித்தாளையடிகள் - *
வெண்பாவினன்பர்விருப்பு. - - (௮௯)

[முப்பொருட்சிலேடை]

புரிவரும்யோகத்தார்புரவலர்களந்த - *
கரிமாவிழைகழுக்குன்றே-பெரிபாம்பார் - *
கையானையானுன்காமுகனென்றென்றுண்டு - *
கையானையானுங்காப்பு. - - (௯௰)

[இதுவுமது.]

வளத்தில்லறத்தோர்மதனன்கரிதி - *
களத்திரமன்னுகழுக்குன்றே-யளக்கரும்விண் - *
மண்டெரியானுன்வளர்கொடியோனெற்றியிற்கண் *
மண்டெரியானுன்மனை. - - (௯௧)

[இதுவுமது.]

மருவுபொழில் மாதர் விழிவாசத்தடநீ - *
கருவரிகாட்டு கழுக்குன்றே - வருநரியா - *
மாப்பினுகத்தான் வரமுன் பரிமேற்சென் - *
மாப்பினுகத்தான் வணா. - - (௧௰௨)

[இதுவுமது.]

அனமார் கயங்களணிவீதிசான்றோர் - *
கனவிரதமேவு கழுக்குன்றே - தினையுமன்பர் - *
பஞ்சமுகத்தான் படிக்காசருளினான் - *
பஞ்சமுகத்தான் பதி. - - - (௧௰௩)

[இதுவுமது.]

விரவுபொழிலன்னமிடு மெல்லியரீவோர் - *
காவீரமன்னு கழுக்குன்றே - விரவு - *
மதியரவம் பாற்றினான் வாழ்த்தி வணங்கு - *
மதியரவம் பாற்றினான் வாழ்வு. - - (௧௰௪)

[இதுவுமது.]

விருப்புமலர் வெண்முத்தம் வேந்தர் சமரில் - *
கரும்புண்மலி கழுக்குன்றே - யரும்புதன - *
மாவடுவருந்துவார் வானீர்முடியரன்பர் - *
மாவடுவருந்துவார் வாழ்வு. - - (௧௰௫)

[நாற்பொருட் சிலேடை]

விளங்குமதி பூவிடம்பாம்பரனார் - *
களங்கமுறு கழுக்குன்றே - துளங்கவிலாக் - *
கல்லாலடிப்பிரியான் காணக்கதிதந்த - *
கல்லாலடிப்பிரியான் காப்பு. - - (௧௰௬)

[இதுவுமது.]

பெட்கும்பொழின்மாட ம்பேதையர்கணாட்டமிடை *
கட்கந்தந்தன்னுங்கழுக்குன்றே-நட்புறுகோ - *
பாலன்றுதித்தார்பசியநறு'வெயின் - *
பாலன்றுதித்தார்பதி. - - - (௧௭)

[இதுவுமது]

சிங்காரமார்குவடுசிற்பரனார்தோள்கைகண்டங் - *
கங்காளமன்னுங்கழுக்குன்றே-சிங்கியுண - *
நாகைக்காரோணத்தார்நான்முகத்தார்நாடருஞ்சீர் *
நாகைக்காரோணத்தார்நாடு. - (௧௮)

[இதுவுமது.]

தொண்டர்மடங்கோகனகஞ் சூழ்கயஞ்சேல்வெற்புமி
கண்டனந்தன்னுங்கழுக்குன்றே-யெண்டருமா [னார்
கம்பத்தடியானன்காணவருள்கச்சியே - *
கம்பத்தடியானன்காப்பு. - - (௧௯)

[இதுவுமது.]

சந்தக்கடம்பாவிசார்சேவகம்வீதி - *
கந்தரங்கமாருக்கழுக்குன்றே-மைந்தனஞ் - *
ஞானத்தினிப்பார்நனுகாதருள்பாணர் - - *
கானத்தினிட்பார்களிப்பு. - - (௨௰)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.